**வெளியிடுகை அடிப்படையில் அமைந்த உதவி மீதான உலகளாவிய பங்களிப்புச் செயற்திட்டம் (ஜீபீஓபீஏ) - 2013**

---

வெளியிடுகை அடிப்படையில் அமைந்த உதவி மீதான உலகளாவிய பங்களிப்புச் செயற்திட்டத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐடீஏ) மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையேயான 2011 டிசெம்பர் 27 ஆந் திகதிய ரீஎப் 099870 இலக்க மானிய உடன்படிக்கையினது 2.06 (சீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கம், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

---

வெளியிடுகை அடிப்படையில் அமைந்த உதவி மீதான உலகளாவிய பங்களிப்புச் செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல், மற்றும் வடிகாலமைப்புச் சபை அமைச்சும் தற்போதைய நீர்வழங்கல் நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வடிகாலமைப்பு அமைச்சினதும் கீழுள்ள தேசிய நீர் வழங்கல், மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தினது அமுலாக்கல் முகவராகும். தற்போது வீடுகளுக்குப் பொருத்தப்பட்டுள்ள வடிகாலமைப்பு எண்ணிக்கையை அதிகரித்தலும் புதிய வடிகாலமைப்பு வலைப்பின்னலை உருவாக்கலும் குடியிருப்பு மட்டத்தில் ஆங்காங்கே சுகாதார வேலைகளை அபிவிருத்தியடையச் செய்வதுமே செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 9.96 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 52 சதவீதத்திற்குச் சமமான 5.08 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான நிதியளிப்பு புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியாலும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தாலும் வழங்கப்படுவதற்கு ஏற்படாகியிருந்தது. மேலும், 33 சதவீதத்திற்குச் சமமான 3.24 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கை அரசாங்கத்தாலும் (ஜீஓஎஸ்எல்) 11 சதவீத்திற்குச் சமமான 1.21 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையாலும் உதவு தொகையாக வழங்கப்படுவதற்கிருந்தது. 4 சதவீதத்திற்குச் சமமான 0.43 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நலன்பெறுநர்களின் உதவு தொகையாக அமையும். 2011 டிசெம்பரில் ஆரம்பமாகிய செயற்திட்டம் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவடைவதற்கிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்கல் மற்றும் பேணுதல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல் மற்றும் பயன்படுத்துதல், காலத்திற்கேற்ப நியாயபூர்வமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பனவும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில்

விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன். ஆகையினால், எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியனவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு வகைப்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிர

(அ) செயற்திட்டம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிசார் கூற்றுக்கள்

---------------------------

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 54,289,672 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் செலவினம் ரூபா 4,078,819 ஆகும். 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 58,368,491 ஆகும். மீளாய்வாண்டு முன்னைய ஆண்டு என்பவற்றினது செலவினப் பொழிப்பும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினமும் கீழே தரப்பட்டுள்ளன.

| **விடயம்** | **டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டு** | | **2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2013**<br>**ரூபா** | **2012**<br>**ரூபா** | **ரூபா** |
| சொத்து, பொறித்தொகுதி, உபகரணம் | 84,500 | 798,625 | 883,125 |
| நடைபெறும் மூலதன பேலை | 54,205,172 | 3,280,194 | 57,485,366 |
| | 54,289,672 | 4,078,819 | 58,368,491 |

## 5 கணக்காய்வு அவதானிப்பு

செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்பற்றவற்றிற்கு ரூபா 472,192 செலவிடப்பட்டிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் பௌதிக செயலாற்றல்

### 6.1 நிதிப் பயன்பாடு

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ஒதுக்கீடு மற்றும் பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| **மூலம்** | **நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை** | | **2013 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு திட்ட நிதி ஏற்பாடு** | **ஆண்டின் போது பயன்படுத்திய நிதி** | **2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதி** |
|---|---|---|---|---|---|
| | **அமெரிக்க டொலர் மில்** | **ரூபா. மில்** | **ரூபா. மில்** | **ரூபா. மில்** | **ரூபா. மில்** |
| மானியம் | 5.08 | 660.40 | 100 | - | - |
| இலங்கை அரசாங்கம் | 3.24 | 421.46 | 150 | 45.00 | 48.06 |
| தே.நீ.வ.மற்றும் வ.அ.சபை | 1.21 | 157.04 | 50 | 15 | 15.00 |
| நலன்பெறுநர் | 0.43 | 55.90 | - | 5. 15 | 5.15 |
| மொத்தம் | 9.96 | 1294.80 | 300 | 65.15* | 68.21* |

* வைப்புகளும் முற்பணங்களும் பயன்படுத்திய நிதியாகக் கருதப்பட்டமையே இவ்வறிக்கையின் 4 ஆம் பந்தியில் தரப்பட்ட தொகையுடன் இத்தொகை இணக்கமுறாததற்கான காரணமாகும்.

**6.2 பௌதீக செயலாற்றல்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) ஆரம்ப கட்டத்தில் மதிப்பீடுகளில் ஏற்பட்ட தவறு காரணமாக செயற்திட்டத்தின் மூலத் திட்டத்தில் 15,407 நலன் பெறுநர் குடியிருப்புகளுக்கு நீர் வழங்கல் இணைப்புகள் இலக்கிடப்பட்டபோதும், பின்னர் அது 5,015 நலன்பெறுநர் குடியிருப்புகளாக குறைக்கப்பட்டது. இதன் விளைவாக வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 100 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 75 மில்லியன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையால் அமுல்படுத்தப்படும் ஏனைய செயற்திட்டங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின்போது செயற்திட்டத்தின் 11 உறுப்புகளில் 06 அமுலாக்கப்படாது இருந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் மூலத் திட்டத்தில் அந்த உறுப்புகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(இ) 2011 நவம்பர் தொடக்கம் பதில் அடிப்படையில் செயற்திட்ட முகாமையாளர் ஒருவரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நியமித்திருந்தது. முழு நேர அடிப்படையில் செயற்திட்டப் பணிப்பாளர் ஒருவரை நியமனஞ் செய்வது மானிய உடன்படிக்கை ஏற்பாட்டுக்கு இது முரண் ஆகும்.

**6.3 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

செயற்திட்ட நடவடிக்கை எதிலுமே பங்குபற்றாத தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை ஊழியர் ஒருவருக்கு செயற்திட்டத்தால் ரூபா 533,291 ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது.